# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 23 | 06-06-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 108



அழகன்

மறுதோன்றிப் பதிப்பகம்



யாழ் சாலை,
கிளிநொச்சி.


## 32 அகதிகள் திரும்பினர்

(நெடுந்தீவு)

இந்தியாவின் மண்டபம் அகதி முகாமில் இருந்து யாழ். நெடுந்தீவிற்கு 32 தமிழ் அகதிகள் நேற்று காலை 7.30 மணியளவில் வந்திறங்கிய இவர்களை அன்ரனீஸ் பாலர் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களை

(vi ஆம் பக்கம் பார்க்க)

# யு.என்.எச்.சி.ஆர் உதவி உயர்ஸ்தானிகர் அரசியல் துறைப் பொறுப்பாளருடன் சந்திப்பு

## ஒன்றரை மணி நேரம் நீடித்தது



(அலுவலக செய்தியாளர்)

**அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உதவி உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட குழுவினர் நேற்று சந்தித்து உரையாடியுள்ளனர். கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் மதியம் 12 மணியளவில் ஆரம்பமான கலந்துரையாடல் ஒன்றரை மணி வரை நீடித்தது.**

இக்கலந்துரையாடலில் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உதவி உயர்ஸ்தானிகர் கமல் மோர்ச்யாணி யு.என்.எச்.சி.ஆர். கொழும்பு பிரதிநிதி நீல் நயிட் நிறைவேற்று அதிகாரி அராபர் யாமல், யு.என்.எச்.சி.ஆர். யாழ். பிரதிநிதி எக்கி முறாட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச பொது நிறுவனங்களுடனான இணைப்பாளர் தியாகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (லோ)

## சிரான் திட்டப் பணிப்பாளரை ஐ.நா. பிரதிநிதிகள் சந்திப்பு

சிரான் திட்டப்பணிப்பாளர் செல்வின் அவர்களை சிரான் பணிமனையில் வைத்து ஐக்கிய நாடு அகதிகளுக்கான உதவி உயர்ஸ்தானிகர் கொண்ட குழுவினர் சந்தித்து உரையாடியுள்ளனர்.

மேற்படி பணிமனையில் 2.20 மணிக்கு ஆரம்பமான கலந்துரையாடல் 3.10 வரை இடம்பெற்றுள்ளது. சிரான் தரப்பில் சிரான் திட்டப்பணிப்பாளர் செல்வின், பொருளாதார ஆலோசகர் ஜெய மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்புக்கள் யாவும் நிறைவு பெற்றதும் ஐக்கிய நாடுகளுக்கான யூ.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் வவுனியாவை வாகனம் மூலம் சென்றடைந்தனர். (லோ)

## படைமுகாம் விஸ்தரிப்பு

ஏழாலை சந்தையில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முகாம் அமைக்கப்படுவதைக் கண்டித்து பொது அமைப்புக்கள் கடந்த 19ஆம் திகதி மறியல் போராட்டம் ஒன்றையும் நடத்தியிருந்தனர். அப்போது அம்முகாமுக்குச் சென்ற ஊரெழு முகாம் பிரிகேடியர்

(vi ஆம் பக்கம் பார்க்க)

## ம.நே.க.பிரிவின் புதிய அணி பயிற்சியை முடித்து வெளியேறியது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மனித நேயக்கண்ணிவெடி அகற்றும் பிரிவின் புதிய அணியினர் பயிற்சி முடித்து நேற்று வெளியேறியுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பரந்தனில் அமைந்துள்ள கண்ணிவெடிப் பிரிவு பயிற்சி முகாமில் இடம்பெற்றுள்ளது. 39 பேர் கொண்ட புதிய அணியினரே

(vi ஆம் பக்கம் பார்க்க)




## சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் உறுதியாகவுள்ளனர் என்ற நம்பிக்கையுள்ளது

### சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

சமாதான முயற்சிகளில் விடுதலைப்புலிகள் உறுதியாகவே இருக்கின்றனர் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இவ்வாறு சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறியதாவது; இடைக்கால நிர்வாகமொன்று அமைக்கப்படுவது குறித்து இரு தரப்பினருக்கும் இடையே கொள்கையளவில் கருத்து வேறுபாடுகள் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. எங்களுக்கு இடையில் அவ்வளவு பெரிய இடைவெளி இருப்பதாக நான் நினைக்கவில்லை.

கணிசமான அளவு பங்கும் அதிகாரமும் வேண்டும் என புலிகள் கேட்கின்றனர். நாங்கள் அதற்கு இணங்கியுள்ளோம்.

(vi ஆம் பக்கம் பார்க்க)

## அமெ., யு.எஸ்.எயிட் பிரதிநிதிகள் யாழ். குடாநாடு வருகை

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டிற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகள் இருவரும், யு.எஸ்.எயிட் உதவி அமைப்பின் பிரதிநிதிகள் இருவர் உட்பட நால்வர் யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

யு.எஸ்.எயிட் அமைப்பின் பிரதி

(vi ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு நகைக்கடை இளைஞர் யாழ். நகரில் சடலமாக மீட்பு

(வடமராட்சி)

யாழ். நகர் கஸ்தூரியார் வீதிப் பகுதியில் உள்ள நகைக்கடையில் பணியாற்றும் மற்றுமொரு இளைஞர் சடலமாக நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை மண்கும்பானைச் சேர்ந்த பாலச்சந்திரன் ராகவன் (வயது-19) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். மேற்படி இளைஞன் நேற்று முன்தினம் இரவு படுக்கைக்குச் சென்றிருந்ததாகவும் நேற்றுக்காலை உயிரிழந்த நிலையில் அவரது தங்குமிடத்தில் இருந்து மீட்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது. இதேவேளை, நான்குதினங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த விஸ்வா எனப்படும் விக்கி (வயது 20) இப்பகுதியில் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## தமிழீழ மாணவர் எழுச்சி நாள் இன்று தமிழீழமெங்கும் அனுஷ்டிக்கப்படும்



(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று தமிழீழமெங்கும் சிறப்புற நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் எழுச்சிப் பேரணிகள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன.

காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இருந்து எழுச்சிப் பேரணி ஆரம்பமாகி பாண்ட் வாத்திய அணி வகுப்புடனும், பாடசாலை மாணவர்களின் அணிவகுப்புடனும் தியாகி சிவகுமாரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்படவுள்ளது. பேரணி சந்திரன் பூங்காவைச் சென்றடைந்ததும் எழுச்சிப் பிரகடனம் மற்றும் மாவட்ட அறிக்கை என்பன வாசிக்கப்படும். அதனையடுத்து

(vi ஆம் பக்கம் பார்க்க)



## திருமலை பாலம்போட்டாறில் இரு போராளிகள் கடற்படையால் கைது

திருகோணமலை பாலம்போட்டாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் இரு போராளிகள் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கோகுலன், கவேந்திரன் ஆகிய மேற்படி இருவரையும் நேற்று திருமலை மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

மேலும், இவர்களிடம் ஆயுதங்கள் இருந்ததாலேயே கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# 90ம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

மண்ணில் 20 - 10 - 1980



மண்ணிறாக 10 - 03 - 2003

## பிரான்சிஸ் சந்திரா-சர்வானந்தா

**ஒயிலர் - தூயவன்**

*10.03.2003 அன்று எம்மைவிட்டுப்பிரிந்த தூயவனின் துயரச் செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், நினைவுக்கல் திரைநீக்க நிகழ்வில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு;*

*07.06.2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 90ம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

39/2, திருவையாறு,
கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்

(3307)

## ஓராண்டு நினைவேடு

**நினைவஞ்சலி அழைப்பு**



| | | |
|---|---|---|
| 16 - 01 - 1949 | பிறப்பு | 28 - 12 - 1980 |
| 26 - 01 - 2002 | இறப்பு | 18 - 05 - 2002 |



**நடராசா சிவசுப்பிரமணியம்**
நாரந்தனை

**சிவசுப்பிரமணியம் பிரதீபன்**
நீர்வேலி

இன்று மதியம் எங்கள் இல்லத்தில் நடைபெற இருக்கும் இவர்களின் ஆத்ம சாந்திக்கான கிரியை நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் உறவினர்கள், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

முகவரி:- ந.வடிவேலு (ராசு),
தொண்டமான் நகர்,
கிளிநொச்சி.

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்,
போராளிகள்
சந்தியா,அனந்தன்.

(கி-7894)

**விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

# கிளைமுகாமையாளர், விற்பனையாளர், எழுதுனர் பதவிகளுக்கான விண்ணப்பம்

**கிளி/முல்லை மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களிடமிருந்து கோரப்படுகின்றது. (சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்) தற்காலிகம்**

விசுவமடு விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில், கிளை முகாமையாளர், விற்பனையாளர், எழுதுனர் பதவிகளுக்கான தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் யாவும் "தலைவர், விசுவமடு விவசாயிகள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், விசுவமடு" என்ற முகவரிக்குச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2003.06.16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பதிவுத் தபால் மூலமாகவோ அன்றி நேரடியாகவோ கிடைக்கக் கூடியதாகத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். (கல்விச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் பிரதிகள் இணைக்கவும்.)

## 01) கிளை முகாமையாளர் பதவி

பதவிக் குறியீடும், சம்பளக் குறியீடும்-208/14 (31/97)

**கல்வித்தகைமை:-**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. கூட்டுறவுப் பணியாளர்(சாதாரணதரம்) பத்திரம் க.பொ.த.சாதாரணதரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ், பாஷை என்பவற்றினை உள்ளடக்கிய 06 பாடங்களிலான சித்தி.

* வயது 20 - 40 வருடங்கள்

## 02) விற்பனையாளர் பதவி

பதவிக் குறியீடும், சம்பளக் குறியீடும்- 308/17 (31/97)

**கல்வித்தகைமை:-**

அ. கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட பிரிவு பரீட்சை சித்தி.

அல்லது

ஆ. 8ஆம் வகுப்பு சித்தியுடன், விற்பனைத்துறையில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

* வயது 20 - 40 வருடங்கள

## 03) எழுதுனர் பதவி

பதவிக்குறியீடும், சம்பளக் குறியீடும் - 302/15(31/97)

**கல்வித்தகைமை:-**

அ) கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம்/வர்த்தகஎண்கணிதம்/எண்கணிதம்/தமிழ்/சிங்களம் பாடங்கள் உட்பட ஐந்து திறமைச்சித்திகளுடன் கூடிய ஆறு பாடங்களில் சித்தி.

* வயது 20 - 40 வருடங்கள்

குறிப்பு:- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தால் கோரப்படும் பிணையைச் செலுத்திக் கடமையைப் பொறுப்பேற்கத் தயாராக இருக்க வேண்டும்.


**தலைவர்,
விசுவமடு விவசாயிகள் பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
விசுவமடு.**

(கி-8144)



# வற்றாப்பளை அம்மன் பொங்கல் திருநாள்

# சிறப்புப் பேருந்துப் பணி



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

**09.06.2003** ஆம் நாள் திங்கள் கிழமை வற்றாப்பளை அம்மன் கோவிலில் நடைபெறும் பொங்கல் திருநாளை முன்னிட்டு பின்வரும் வழித்தடங்களில் சிறப்புப் பேருந்துப்பணி நடைபெறும்.

புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம், முள்ளியவளை நகர், குமுழமுனை நகரிலிருந்து செம்மலை ஊடாக, நெடுங்கேணியிலிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக, முத்தையன் கட்டிலிருந்து ஒட்டுசுட்டான் ஊடாக, புளியம்பொக்கனை நகர், மல்லாவி பேருந்து நிலையம், கிளிநொச்சி பேருந்து நிலையம் ஊடாக வட்டக்கச்சி, முழங்காவில் பேருந்து நிலையம் ஊடாக சந்தபுரம், புளியங்குளம் பேருந்து நிலையம், பளை பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு வற்றாப்பளை அம்மன் கோவிலைச் சென்றடையும் என்பதை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- திங்கள் கிழமை காலை 8.00 மணியிலிருந்து நாள் முழுவதுமான பணிகள் நடைபெறும்.

**பொது முகாமையாளர்,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.**

(கி-8140)

- புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபை குறித்து -

# சகல அரசியல் கட்சிகளோடும் அரசு பேச்சுவார்த்தை நடத்தத் திட்டம்

## - அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளது இடைக்கால நிர்வாக சபைக்கோரிக்கை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றல்ல என சிறிலங்கா அமைச்சரவையின் பேச்சாளரும், அமைச்சருமாகிய ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன்தினம் அரசாங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கு செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடாத்தி முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாக சபை யோசனைகள் குறித்து சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களோடும் பேச்சுவார்த்தை நடாத்த அரசு திட்டமிட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார் அத்துடன் இம் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளாவிட்டாலும் மாநாட்டில் கிடைக்கின்ற நிதிகளை வட-கிழக்கிற்கு பயன்படுத்துவதற்கு புலிகளின் பங்களிப்பு அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் நிதியமைச்சர் சொக்சி மற்றும் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, திறைசேரி அதிகாரிகள் உட்படபலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# பாடசாலை நேரத்தை நீடிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது

## -கல்வி அமைச்சர் தெரிவிப்பு

ஜீ.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி பாடநேரங்களை நீடிப்பது பற்றி முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தற்போதைய பாடசாலைத் தவணைக்காலம் முழுப்பாட விதானத்தையும் பூர்த்தி செய்வதற்குப் போதுமானது அல்ல. ஜீ.சி.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் தோற்றுவோரில் 76 சதவீதமான மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியெய்துவதில்லை. கணித பாடத்தில் தோற்றும் 60சதவீதமான பரீட்சார்த்திகளும், விஞ்ஞான பாடத்திற்கு விடை எழுதும் 50 சதவீதமான மாணவர்களும் சித்தி எய்தப் போதுமானப் புள்ளிகளை எடுப்பதில்லை எனவும் தெரியவந்திருக்கின்றது.

இந்நிலையில் சாதாரண தரம் சம்பந்தமான பிரச்சினையில் பாடநேர வேளையை நீடிப்பது குறித்து ஆராய்ந்ததாக அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜீ.சி.ஈ உயர்தரத்திற்கும் இக்கால நீடிப்புத் தேவை என்றும் அமைச்சர் கூறியுள்ளார். ஒரு வருடத்தில் 190 நாட்கள் மாத்திரமே பாடசாலைகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அதிலும் ஒரு தினத்தைத் தெரிவு செய்தால் 20 முதல் 30 சதவீதமான ஆசிரியர்கள் விடுமுறையில் செல்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் அறிவுசார் கல்வியை முழுமையாகப் போதிப்பது பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# மகரகம பகுதியில் இருவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

மகரகமப் பகுதியில் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு அருகிலேயே இந்த இரட்டைக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கொலை செய்யப்பட்ட இருவரும் இதுவரையும் அடையாளம் காணப்படவில்லை. மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளதாக மேல்மாகாண தெற்குப் பிரிவிற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி.பி பகிரண தெரிவித்துள்ளார். வானில் வந்த ஆயுதம் தாங்கிய குழுவொன்று இந்த இரட்டைக் கொலைகளைச் செய் துள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிக்கின்றார்.

கொலை செய்யப்பட்ட இருவரின் சடலங்களும் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக மகரகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

# பா.ஐ.கட்சி அத்வானி தலைமையில் அடுத்த தேர்தலைச் சந்திக்கும்

## -வாஜ்பாய் அறிவிப்பு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சி அத்வானி தலைமையில் அடுத்த தேர்தலைச் சந்திக்கும் என வாஜ்பாய் திடீர் அறிவிப்புச் செய்துள்ளார்.

அத்துடன் அத்வானி தலைமையில் கட்சி ஓய்வு இன்றி பாடுபட்டு வெற்றியை அடுத்த தேர்தலில் தேடித் தரும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால், கட்சி நிர்வாகிகள் சிலர், வாஜ்பாய் தலைமையிலேயே பா.ஜ.கட்சி அடுத்த தேர்தலைச் சந்திக்கும் என்று கூறியுள்ளனர்.

பிரதமரின் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடிந்துள்ளமையை அடுத்து, பா.ஐ.கட்சியினர் நேற்று முன்தினம் பாராட்டுவிழா நடத்தியுள்ளனர்.

இப்பாராட்டு விழாவிலேயே வாஜ்பாய் திடீர் அறிவிப்புச் செய்தார்.

ஆனால் பிரதமரின் இந்தக் கருத்து கூடியிருந்த பா.ஜ.கட்சியினரிடையே அதிர்ச்சியை அளித்துள்ள நிலையில் கட்சியின் தலைவர் வெங்கையா நாயுடு குறுக்கிட்டு வாஜ்பாய் தலைமையையே தொண்டர்கள் விரும்புவதாகக் கூறியுள்ளார்.

பா.ஜ.கட்சிக்கு மட்டுமன்றி தேசிய சனநாயகக் கூட்டணிக்கும் வாஜ்பாய் தான்தானா தலைவர் என்று கூறியுள்ள வெங்கையா நாயுடு,

நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்கு அத்வானி பொறுப்பேற்று வழிநடத்திச் செல்வார் என்பதையே வாஜ்பாய் அவ்வாறு கூறியிருப்பதாகக் கூறியுள்ளார்.

# நாடாளு. உறுப்பினர் சம்பந்தன் இந்தியா பயணம்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் இந்தியாவிற்குப் பயணமாகியுள்ளார்.

நேற்று முன்தினம் காலை இந்தியா சென்ற இவர் சில தினங்கள் அங்கு தங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவர் தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதனால் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# டோக்கியோ மாநாட்டில் கலக்க ரவூப் ஹக்கீம் ஜப்பான் பயணம்

(கொழும்பு)

டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சிறிலங்காவிற்கான அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஜப்பான் பயணமாகியுள்ளார்

நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து மலேசியா சென்ற அமைச்சர் அங்கிருந்து ஜப்பான் செல்லவுள்ளார். இம் மாநாட்டில் விடுதலைப்புலிகளைக் கலந்து கொள்ளச் செய்வதற்குத் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# வடக்கு-கிழக்கில் பாலங்களை புனரமைக்க ஒப்பந்தம்

(கொழும்பு)

மூவாயிரத்து அறுநூறு மில்லியன் ரூபா செலவில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள 89 பாலங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இப்பாலங்கள் அமைப்பதற்கான நிதி பிரிட்டன் வங்கி ஒன்றிடம் இருந்து பெறப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் ஒன்று நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த நேற்று முன்தினம் கைச் சாத்திட்டார். இதன் போது கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் முதலாவது செயலாளர் அன்ரனி மேட்ரவியும் கலந்து கொண்டார்.

# அமைதி முயற்சிகளைத் தொடர இஸ்ரேல்-பலஸ்தீனம் இணக்கம்

(டெல்அவிவ்)

மேற்காசியாவில் அமைதி காணும் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இஸ்ரேலும் பலஸ்தீனமும் ஒப்புக் கொண்டுள்ளன.

நேற்று முன்தினம் ஜோர்தான் நாட்டின் அகபா நகரில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பின் போது, இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் மற்றும் பலஸ்தீனப் பிரதமர் மௌகூ அப்பாஸ் ஆகியோர் இதற்கான உறுதிப்பாட்டை வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஷ் புஷ், ஜோடான் நாட்டு மன்னர் இரண்டாம் அப்துல்லா ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இஸ்ரேலிய மக்களுக்கு எதிராக நடாத்தப்படும் வன்முறை மற்றும் பயங்கரவாதச் செயல்களைத் தாம் எதிர்ப்பதாக பிரதமர் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசியப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை மூலம் தீர்வுகாண முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இஸ்ரேலும் பலஸ்தீனமும் அண்டை நாடுகளாக அமைதியுடனும், பாதுகாப்புடன் விளங்க வேண்டும் என்று அமெரிக்காவின் யோசனைக்கு இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல், பலஸ்தீன நாடுகளுக்கிடையே அமைதி காணச் செயற்றிட்டத்தைக் கண்காணிப்பதற்காக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா றைஸ் மற்றும் வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் ஆகியோரை நியமித்துள்ளதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஷ் புஷ் கூறியுள்ளார்.

# ஜம்மு-காஷ்மீர் குறித்து பாக். பிரச்சினை கிளப்பினால் ஆசாத்-காஷ்மீர் குறித்தும் பேச்சு நடத்த வேண்டும்

## - இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீர் குறித்து பிரதமர் வாஜ்பாய் கருத்துக் கூறியுள்ளமைக்குப் பதிலடி கொடுக்கும் அறிக்கைப் போர் நடத்தப் போவதில்லை எனப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்தியா பாகிஸ்தானிடையே மீண்டும் உறவு வளர்ந்துவரும் நிலையில் ஜம்மு-காஷ்மீர் குறித்து பாகிஸ்தான் பிரச்சினை எழுப்பினால், அந்நாட்டின் கட்டுப்பாட்டிலுள்ள ஆக்கிரமிப்பு காஷ்மீர் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் பிரதமர் வாஜ்பாய் கூறியிருந்தார்.

இந்நிலையில் இந்தியாவின் தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த பாகிஸ்தான் தொடர்புத்துறை அமைச்சர் ரஸித் அகமத் இருதரப்புத் தலைவர்களும் சமாதானத்தை நோக்கிப் பயணிப்பது வரவேறகத்தக்கது என்றும், பிரதமர் வாஜ்பாயின் பதிலுக்காக பாகிஸ்தான் காத்துக் கொண்டிருப்பதாகவும் இதற்கான தகுந்த சூழ்நிலை உருவாகிய பின்பு ஆக்கபூர்வ அணுகு முறையுடன் பேச்சுவார்த்தை தொடரப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதனிடையே இருதரப்பு உறவுகளிலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்ட பின்னர் இரு அணிகளுக்கிடையே கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும் என மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் விக்கிரம் தர்மா கூறியுள்ளார்.

# இந்தியாவில் அதிகரித்த வெப்பத்தால் இதுவரை 1500 பேர் மரணம்

(புதுடில்லி)

இந்தியா முழுவதும் கோடை வெப்பத்துக்குப் பலியானோர் எண்ணிக்கை 1500 ஆக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் அனல் காற்றால் மக்கள் அவதி படும் நிலை உருவாகியுள்ளது.

ஆந்திரா மாநிலத்தில் மட்டும் சுமார் 1200 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரிஸா, உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட வடமாநிலங்களிலும் அதிக வெப்பம் மக்களை அவதிப்படவைக்கின்றது.

தமிழ் நாட்டிற்கும் பீகாருக்குமிடையே உருவாகியுள்ள நில காற்றழுத்த அனல் வெப்பத்தால், ஆந்திரா மாநிலம் உட்பட கடும் வெயில் காய்கின்றது.

ஆந்திராவில் நேற்று முன்தினம் மட்டும் 20 பேர் பலியாகியுள்ளனர்.

உயிரிழந்த குடும்பங்களுக்குத் தேசிய இயக்க பேரழிவு நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென பிரதமருக்கு ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு கடிதமெழுதியுள்ளார்.

ஒரிஸா, உத்தரப்பிரதேச மாநிலங்களில் மட்டும் நாள் தோறும் சராசரி 118-120 பாகை பரனைற் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

ராஜஸ்தானில் மட்டும் 25000க்கும் மேற்பட்ட கால்நடைகள் மடிந்துள்ளன.

தமிழகத்தில் திருச்சியில் கடந்த ஒருவாரமாக 106 பாகை பரனைற் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

தென்மேற்குப் பருவக்காற்று மழை தொடங்கும் வரை வெப்பத்தின் தாக்கம் நீடிக்கும் என கூறப்படுகின்றது.

# சிறுபான்மை கட்சியினரின் தயவில் எமது கட்சி தங்கியிருக்கவில்லை



## அனுரா பண்டார நாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் ஒன்றை பொதுசன ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினதோ அல்லது இலங்கை தொழிலாளர் காங்கிரசினதோ ஒத்துழைப்பு அவசியமில்லை என்றும் இடதுசாரி கட்சிகளின் ஆதரவுடன் தம்மால் புதிய அரசாங்கமொன்றை அமைக்க முடியும் என்றும் அதற்கான முயற்சியில் தாம் ஜே.வி.பி.யுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் பொ.ஐ. மு. பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார். சிறுபான்மைக் கட்சிகளின் தயவில் எமது கட்சி தங்கியிருக்கவில்லை. ஜே.வி.பி.யுடனான கூட்டு எமக்குபோதுமானது என்றும் அவர் கூறினார்.

# சூழல் பாதுகாப்பு தினத்தையொட்டி கொடி வாரம் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

சூழல் பாதுகாப்பு தினத்தினையொட்டி கொடி வார அறிமுக நிகழ்வும், கருத்தரங்கும் நேற்று இடம்பெற்றுள்ளது.

காலை 10 மணியளவில் பளை நகரப் பகுதியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் பளைப் பிரதேச செயலர் புத்திசிகாமணி, பளைப் பிரதேச அரசியல் துறையினர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் பளைப்பிரதேச செயலர் புத்திசிகாமணி அவர்கள் சூழல் பாதுகாப்புத் தினத்தினை ஒட்டிய கொடியினை அறிமுகம் செய்து கொடி வாரத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை. மாவட்ட அரச அதிபர் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அவர்களிடமிருந்து முதல் கொடியினை முல்லை.மாவட்ட அரச அதிபர் திருமதி.இமெல்டா சுகுமார் அவர்கள் பெற்றுக்கொண்டார். முல்லை.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் இ.மாறன் அவர்களிடமிருந்து சூழல் பாதுகாப்பு தினக் கொடியினையும் பழமரக்கன்றுகளையும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா பெற்றுக்கொண்டு சூழல் பாதுகாப்பு வார நிதி சேகரிப்பினையும் ஆரம்பித்து வைத்தார். (பா)

## விசேட கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பிரதேச கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்திற்கு பேரவை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோடடக் கல்வி அதிகாரிகள், கோட்ட ரீதியாகத் தெரிவு செயயப்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் பிரதிநிதிகளும், துறைசார் பிரதிநிதிகளும் தவறாது கலந்து கொள்ளுமாறு வன்னி கல்வி மேம்பாட்டுப் பேரவைச் செயலாளர் கேட்டுள்ளார். (பா)

### ம.நே.க.பிரிவு...

இவ்வாறு பயிற்சியினை முடித்து வெளியேறியுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிகளை என்.பி.எ.நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்நிகழ்வுகள் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் யோகன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்புரைகளை கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பணிப்பாளர் பரணி, இணைப்பாளர் யோகன், நோர்வே மக்கள் உதவி அமைப்பு என்.பி.எ.பிரதிநிதி லூக் அன்ரின்சன், டென்மார்க் கண்ணிவெடி நடவடிக்கை அமைப்பு மக்,டக் பிரதிநிதி எரிக், கண்ணிவெடி நடவடிக்கை அமைப்பு பிரதிநிதி மைக் டெனால்டோன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இப்புதிய அணியினருக்கான பயிற்சிகள் டென்மார்க் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அனுசரணையுடன் என்.பி.எ.நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சிகளை முடித்து வெளியேறும் இந்த அணியினர் பூநகரிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் புதைத்த வெடிபொருட்களை அகற்றி மக்கள் வாழ்வை உறுதிப்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அமெ., யு.எஸ்...

நிர்வாகியான பெட்ரிக் டபிள்யு சிக்ஸ் மற்றும் கரோல்ட் பெக்ரா, தூதுவராலய அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் கிரிஸ்ட் லோங் மற்றும் ஊடகச் செயலாளர் பத்மினி ராஜதுரை ஆகிய நால்வர் அடங்கிய குழுவே விமானப்படை உலங்கு வானூர்தி மூலம் யாழ்.நகர் வருகை தந்த இவர்கள் யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்து யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி திட்டமிடல் பணிப்பாளர் செ.சுந்தரம்பிள்ளை மற்றும் திணைக்கள அதிகாரிகளைச் சந்தித்து உரையாடியதுடன் இருபாலை, கோப்பாய் பகுதிகளில் கலோரெஸ்ட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டனர்.

பின்னர் தென்மராட்சிப் பகுதிகளுக்கு விஜயம் செய்த இவர்கள் அப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பகுதிகளைப் பார்வையிட்டதாகவும் அதன் பின்னர் முஸ்லிம் பகுதிகளில் 1980 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்ந்து வரும் முஸ்லிம் மக்களின் நலன்கள், செயற்பாடுகள் தொடர்பாக கேட்டறிந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

### படைமுகாம்...

ஏழாலை சந்தைப் பகுதியில் மட்டுமே முகாம் அமைக்கப்படும் என உறுதி வழங்கியிருந்தார்.

ஆனால், இந்த உறுதிமொழிக்கு மாறாக தற்போது முகாமின் எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டு வருவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

### சமாதான முயற்...

சிறிது காலத்திற்குப் பின்னர் இரு தரப்பினருக்கும் இடையே நேரடி சந்திப்புக்கள் நடக்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்.

எனது அரசு திட்டங்களை உண்மையில் செயற்படுத்தும் என்பதை கொடையாளி நாடுகளுக்கு உணர்த்தி நம்பவைப்பது முக்கியம்.

உதவியைப் பயன்படுத்துவதில் சிறிலங்கா கடந்த காலத்தில் திறமையாகச் செயற்படவில்லை. இதை மாற்றி திறமையாக செயற்படுவதற்கான ஓர் புதிய சட்டமாக உருவாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று கூறினார்.

### தமிழீழ மாணவர்...

சிறப்புரையுடன் காலை நிகழ்வுகள் நிறைவடையும்.

பிற்பகல் 7.00 மணிக்கு மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகும். இந்நிகழ்வுகளில் மாணவர் அமைப்பால் நடத்தப்பட்ட கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து பேபி ஆசிரியரின் நெறியாள்கையில் உருவாகிய சங்கநாதம் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய நான்கு பிரதேசங்களிலும் இன்று காலை 10.00 மணிக்கு மாணவர் எழுச்சிப் பேரணிகள் இடம்பெறவுள்ளன.

வலிகாமத்தின் எழுச்சிப் பேரணி - யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஆரம்பமாகி கஸ்தூரியார் வீதி வழியாக யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தைச் சென்றடையும்.

வடமராட்சியில் நெல்லியடி நாவலர் மடத்திலிருந்து ஆரம்பமாகும் எழுச்சிப் பேரணி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சென்றடையும்.

தென்மராட்சியில் மீசாலைச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் எழுச்சிப் பேரணி சாவகச்சேரி இந்துக் கல்லூரியைச் சென்றடையும்.

தீவகத்தில் நிகழ்வுகள் வேலணை மத்திய கல்லூரியில் நடைபெற்று பின்னர் அதே இடங்களில் இரவு 7.00 மணிக்கு கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இதேவேளை, உரும்பிராயில் பொன். சிவகுமாரனின் சிலை அமைந்திருக்கும் இடத்தை நோக்கி அதன் அண்மையில் அமைந்துள்ள ஐந்து பாடசாலைகளின் மாணவர்களும் இணைந்து இன்று காலை 9.00 மணிக்கு பேரணியாகச் செல்லவுள்ளனர். அங்கு விசேட கூட்டம் ஒன்றும் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து அங்கிருந்து மாணவர்கள் அனைவரும் உரும்பிராய் முந்திரிகைத் தோட்டப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் முன்னாள் பொறுப்பாளர் மேஜர் முரளியின் சிலை வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு காலை 10.30 மணியளவில் சென்று அகவணக்கம் செலுத்துவதுடன் மலர் அஞ்சலியும் செலுத்துவார்கள். (லோ)

## கிளி.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான

# மாணவர் எழுச்சி நாளையொட்டிய கலை, இலக்கியப் போட்டி முடிவுகள்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக் கிடையே தமிழீழ மாணவரமைப்பினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய கிளிநொச்சிக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களின் பெயர்விபரம் வருமாறு.

### கீழ்ப்பிரிவு ஓவியப்போட்டி

| இடம் | பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 01. | க. டெனிஸ்ரன் | கிளி/கரியாலை நாகபடுவான். இல2 |
| 02. | சி. லக்சன் | கிளி/கரியாலை நாகபடுவான் இல2 |
| 03. | த. தவக்குமரன் | கிளி/கிளிநொச்சி ம.வி. |
| 04. | கு. கஜன் | கிளி/ஜெயபுரம் அ.த.க.பாடசாலை |
| 05. | இ. அருள்தாஸ் | கிளி/கோவில்வயல்சி.சி.த.க.பாடசாலை |
| 06. | நா. தர்சினி | கிளி/கனகபுரம் ம.வி. |

### மத்தியபிரிவு ஓவியப்போட்டி

| | | |
|---|---|---|
| 01. | ஆ.லோபன் | கிளி/பூநகரி ம.வி. |
| 02. | து.மோகனபதி | கிளி/அக்கராயன் ம.வி. |
| 03. | இ.ஜெகதீஸ்வரன் | கிளி/திருவையாறு ம.வி. |
| 04. | க.றஞ்சன் | கிளி/கனகபுரம் ம.வி. |
| 05. | ஜெயராசா | கிளி/உருத்திரபுரம் ம.வி. |
| 06. | பா.சிவசோதி | கிளி/பளைமத்திய கல்லூரி. |

கட்டுரைபோட்டி

| | | |
|---|---|---|
| 01. | இ.துவாரகா | கிளி/அக்கராயன் ம.வி. |
| 02. | தி.சிறிரஜீவன் | கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி. |
| 03. | இ.விமல்ராஜ் | கிளி/பரந்தன் இ.ம.வி. |
| 04. | இ.யாழினி | கிளி/பரந்தன் இ.ம.வி. |
| 05. | க.கலைச்செல்வி | கிளி/பளைமத்திய கல்லூரி. |
| 06. | யே.மரியமற்றலீன் | கிளி/பளைமத்திய கல்லூரி |

### மேற்பிரிவு ஓவியப்போட்டி

| | | |
|---|---|---|
| 01. | இ. திவாகரன் | கிளி/வட்டக்கச்சி ம.வி. |
| 02. | வெற்றிவேல் கஜன் | கிளி/திருவையாறு ம.வி. |
| 03. | து.உதிஷ்ரன் | கிளி/வட்டக்கச்சி ம.வி. |
| 04. | அ.ஜோன்சன் ஆனந்ததீபன் | கிளி/திருவையாறு ம.வி. |
| 05. | எஸ். சிறிவரதன் | கிளி/மத்திய கல்லூரி. |
| 06. | ஜெ.ஜெயகிருஷ்ணா | கிளி/வேரவில் இ.ம.வி. |

### கட்டுரைப்போட்டி

| | | |
|---|---|---|
| 01. | ந.இந்துஜா | கிளி/பிரமந்தனாறு ம.வி. |
| 02. | இ.மதுமிதா | கிளி/பிரமந்தனாறு ம.வி. |
| 03. | செ.சிவசங்கரி | கிளி/மத்தியகல்லூரி |
| 04. | சி.நீலதம்பிகை | கிளி/பளை மத்திய கல்லூரி. |
| 05. | ம.மகிந்தன் | கிளி/மத்திய கல்லூரி |
| 06. | க.விமலேஸ்வரி | கிளி/உருத்திரபுரம் ம.வி. |

இப்போட்டியில் வெற்றியீட்டிய மேற்படி மாணவர்களுக்கான பரிசில்கள் இன்று இரவு பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.

## சாவகச்சேரி மருத்துவமனை

# மகப்பேற்று விடுதிக்கான அடிக்கல் நேற்று நாட்டல்

கடந்த 2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது நிர்மூலமாக்கப்பட்ட சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதி மீள நிர்மாணிக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையை முழுமையாக மீள நிர்மாணிப்பதற்கு 30 கோடி பெறுமதியான மதிப்பீட்டு திட்டம் ஒன்று கட்டடத் திட்ட அதிகாரிகளால் வரையப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஒரு பகுதியாக மகப்பேற்று விடுதியை மீள நிர்மாணிப்பதற்கு நிக்கொட் உதவி அமைப்பு 55 இலட்ச ரூபா நிதி யுதவியை தற்போது வழங்கியுள்ளது.

இதனை அடுத்து புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மகப்பேற்று விடுதிக்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று நண்பகல் இடம் பெற்றது.

இதேவேளை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை வைத்தியசாலை காணியில் புதிதாக நிர்மாணிக்க மேலும் 55 இலட்ச ரூபா நிதியினை நீர்ப் (Neerp) உதவி அமைப்பு வழங்கியுள்ளது. (27)


## அறியத்தருகின்றோம்

இதுவரை காலமும் துணுக்காய் வீதி, மல்லாவியில் இயங்கிவந்த ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியம் (UNICEF) தற்காலிகமாக இல. 144, கண்டி வீதி, கிளிநொச்சியில் இயங்கி வருகின்றது.

09-06-2003 திங்கள் முதல் ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியத்தின் (UNICEF) அனைத்து அலுவலக செயற்பாடுகளும் புதிய அலுவலக கட்டட வேலைகள் முடிவடையும் வரை தற்காலிக அலுவலகம் இல.144 கண்டிவீதி,கிளிநொச்சியிலேயே நடைபெறும் என்பதனை அன்புடன் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான
நிதியம்
(UNICEF)
இல. 144,கண்டி வீதி,
கிளிநொச்சி

(சி-8139)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூன் மாதம் 06ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.